REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மாசி 29உ செவ்வாய் (12—3—57) ★ ★ வெளியூர்: மாசி 30உ புதன் (13—3—57) [இதழ் 234

தி. மு. க. பெற்றுள்ள வெற்றி

(12—3—57 நண்பகல்வரை)

★

சட்டசபை:	மக்கள் சபை:
7	1
(பெற்றுள்ள மொத்த வாக்குகள்)	
சட்டசபை:	மக்கள் சபை:
8,50,997	2,77,926

க. அன்பழகன் வெற்றி முழக்கம்!

எழும்பூரில் காங்கிரஸ் படுதோல்வி!

மும்முனைப் போட்டியில் கழகத்தின் சிறப்பான வெற்றி

சென்னை, மார்ச் 12—

தாயகத்தின் தலைநகராம் சென்னை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நடைபெறும் தேர்தலில் இதுவரை தேடித் தந்துள்ள வெற்றிகளில் இரண்டாவதா நம் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் சென்னை எழும்பூர் தொகுதியிலிருந்து சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது!

தி. மு. கழக அபேட்சகரான க. அன்பழகன் அவர்களை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் எம். இராதாகிருஷ்ண பிள்ளை அவர்களும் சுயேச்சையாக எம். சுந்தரராஜ் என்பவரும் போட்டியிட்டனர்.

காங்கிரஸ் அபேட்சகரைவிடத் தோழர் அன்பழகன் 3,764 வாக்குகள் அதிகம் பெற்று மகத்தான வெற்றி பெற்றுள்ளார். சுயேச்சை அபேட்சகர் 2,344 வாக்குகள் மட்டும் பெற்று ஜாமீன் இழந்தார்.

தோல்வி கண்ட காங்கிரஸ் அபேட்சகரான எம். இராதாகிருஷ்ண பிள்ளை அவர்கள், சென்னை நகரின் முன்னாள் மேயர்; இன்று, நகரசபை நிதிக் கமிட்டித் தலைவர். இவரை வெற்றி பெறச் செய்ய எழும்பூர் தொகுதியில் உள்ள 'ஏக இந்தியா'க்கள் படாத பாடுபட்டு தோல்வியைப் பரிசாகப் பெற்றனர்.

தோழர் அன்பழகன் அவர்கள் பெற்ற வெற்றி தி. மு. கழகத்திற்குச் சிறப்பு தரும் மகத்தான வெற்றியாகும்.

வாக்கு விவரங்கள்:

க. அன்பழகன் (தி. மு. க.) ...	20,293
எம். இராதாகிருஷ்ண பிள்ளை (காங்) ...	16,529
எம். சுந்தரராஜ் (சுயே) ...	2,344
செல்லாதவை	12

நியாயமற்ற தேர்தல்!

'மறுதேர்தல் வேண்டும்' என்கிறார் அகாலி தலைவர் தாராசிங்

பதிண்டா, மார்ச் 11—

பஞ்சாபில் தேர்தல் நியாயமான முறையில் நடைபெறவில்லை என்று அகாலி தலைவர் தாராசிங், பொதுக்கூட்டமொன்றில் தெரிவித்தார்.

'மீண்டும் மறுதேர்தல் நடைபெறவேண்டும்' என்று, அவர் வற்புறுத்தியுள்ளார்.

மத்திய கிழக்கில் மீண்டும் நெருக்கடி

காஜா பிரதேச நிர்வாகத்தை எகிப்து மேற்கொண்டதன் எதிரொலி

ஒரு வரம்புக்கு உட்பட்ட கடமையை ஐ. நா. படை மீறியதா?

கெய்ரோ, மார்ச் 11—

காஜா பிரதேசத்தின் நிர்வாகத்தை உடனடியாக மேற்கொள்ளப் போவதாக எகிப்து சர்க்கார் திடீரென அறிவித்திருப்பதையொட்டி, மத்தியக் கிழக்கில் மீண்டும் ஒரு நெருக்கடியான நிலைமை ஏற்படக் கூடுமோவென அஞ்சப்படுகிறது.

எல்லைவரம்பை மீறி ஐ. நா. படையினர் சாதாரணக் குடிமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக வெளியான செய்திகளைத் தொடர்ந்து எகிப்திய தலைவர் நாசர், தனது யுத்த மந்திரியுடனும் அரசியல் ஆலோசகர்களுடனும் இரண்டு மணி நேரம் ஆலோசனை நடத்திய பிறகு, காஜா நிர்வாகத்தை மேற்கொள்ளப்போவதாக அறிவித்து, உடனடியாக அப்பிரதேசத்திற்கு ஒரு நிர்வாகக் கவர்னரையும் நியமித்தார். இச்செய்தி, ஐ. நா.-விலும், அந்நிய இராஜதந்திர வட்டாரங்களிலும் பெரும் பரபரப்பை உண்டுபண்ணியிருக்கிறது.

ஐ. நா. படை ஒரு வரம்புக்கு உட்பட்ட கடமையைச் செய்ய வேண்டுமென்பதுதான் ஏற்பாடு என்றும், அதாவது, போர் நிறுத்த உடன்பாட்டை அமுல் நடத்துவதும் எதிரிப் படையினரை போர் நிறுத்தக் கோட்டிற்கு அப்பால் கொண்டுவிடுவதுமே அப்படையின் அலுவல்கள் என்றும் இவற்றிற்கு அப்பாற்பட்ட கடமைகளை அப்படையினர் செய்வதற்கு எகிப்து அனுமதிக்காது என்றும் அவசர ஆலோசனைக்குப் பின் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நடைபெற்றது என்ன?

ஐ. நா. படைத் தலைமை அலுவலகத்திற்குள் நுழைய முயன்ற ஆர்ப்பாட்டக்காரர்கள்மீது ஐ. நா. படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், ஐ. நா. கொடிக்குப் பதிலாக எகிப்து கொடியை ஏற்ற முயன்ற இளைஞரொருவர் கொல்லப்பட்டதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

ஐ. நா. படையின் இச்செய்கையை ஆட்சேபித்து ஐ. நா.-விற்கு எகிப்து அரசாங்கம் கண்டனம் தெரிவித்திருக்கிறது.

சாதாரண மக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யவில்லையென்று ஐ. நா. படை தலைமைக் காரியாலயத்திலிருந்து மறுப்பு தரப்பட்டிருக்கிறது.

துப்பாக்கிப் பிரயோகம் பற்றி விசாரணை செய்ய சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு ஐ. நா. துணைச் செயலாளர் விரைகிறார்; அவருடன் ஐ. நா. படைத் தளபதி ஜெனரல் பர்ன்சும் செல்கிறார்.

எகிப்தின் நடவடிக்கை பற்றிய தகவல்கள் ஐ. நா. செயலாளருக்குக் கிடைத்ததென்றும், ஆனால் அவருடைய கருத்து உடனடியாகத் தெரியவில்லையென்றும் தெரிகிறது.

சிரியா ஆதரவு

எகிப்து மேற்கொண்டுள்ள நடவடிக்கையை முழு அளவில் ஆதரிப்பதாயும், என்ன நேரிட்டாலும் அவற்றை ஏற்பதற்குத் தயாரென்றும் சிரியா பிரதமர் அறிவித்துள்ளார்.

சென்னை சட்டசபைத் தேர்தல்

கட்சிகள் நிலவரம்

சென்னை, மார்ச் 12—

சென்னை சட்டசபைக்கு இதுவரையில் 120 இடங்களுக்குமுடிவுகள் அறிவிக்கப்பட்டிருக்கிறது. கட்சி நிலவரங்கள் வருமாறு:—

தி. மு. கழகம்	7
பி. சோ.	1
சோஷலிஸ்டு	1
சுயேச்சை	9
கம்யூனிஸ்டு	2
பார்வர்டு பிளாக்	2
கா. சீ. க.	9
காங்கிரஸ்	89

திராவிட நாகரீகத்தை அகிலம் காணும்!

இலண்டன், மார்ச் 10—

பண்டைய திராவிடத்தின் நாகரீகத்திற்கு ஓர் ஒப்பற்ற எடுத்துக்காட்டாக விளங்கும் 'மொகஞ்சதாரோ' பகுதியில் புதைந்து கிடக்கும் இடிபாடுகள், எஞ்சி நிற்கும் செல்வங்கள் ஆகியவற்றை பி. பி. சி. டெலிவிஷனில் தொடர்ச்சியாக வெளியிடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாம்!

மத்திய சர்க்கார் ஆதிக்கத்திற்கு எதிராக மேலும் ஒரு மாநிலம் புரட்சி!

இராணுவத் தலைவர் வசத்தில் சர்க்கார்!

சுகர்ணோவுக்கு பெரும் நெருக்கடி--இந்தோனேஷியாவில் கொந்தளிப்பு

ஜகார்தா, மார்ச் 12—

இந்தோனேஷிய மத்திய சர்க்கார் ஜாவாக்காரர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டு சகல அதிகாரங்களையும் படைத்திருப்பதற்கு எதிராக, சுமத்திரா மாநிலங்களில், இரண்டரை மாதங்களுக்கு முன் எழுந்த சுதந்திரக் கிளர்ச்சிகள் மேலும் ஒரு சுமத்திரா மாநிலத்திற்கு விரிவடைந்திருக்கிறது.

ஏற்கனவே மத்திய சர்க்காரின் பிடிப்பிலிருந்து விடுதலை கோரி எழுந்துள்ள வடக்கு சுமத்திரா, கிழக்கு இந்தோனேஷியா ஆகிய மாநிலங்களுடன், இப்போது தெற்கு சுமத்திரா மாநிலமும் சேர்ந்துகொண்டது.

எந்தவித இரத்தக்களறியும் இன்றி இந்தப் புரட்சி வெற்றி பெற்றுவருவதாகவும், இராணுவத்தினர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர் என்றும் செய்திகள் வந்துள்ளன.

(இதுபற்றிய விவரம் 3-ம் பக்கத்தில் வெளிவந்திருக்கிறது.)

நோக்கம்

இப்படி நான்கு மாகாணங்கள் சுகர்ணோவின் மத்திய ஆட்சிக்கு எதிராக கிளர்ந்தெழுந்துள்ளதின் நோக்கம், ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

மத்திய சர்க்கார் நிதியிலிருந்து நியாயமான பணம் ஒதுக்கப்படவேண்டும் — மாகாணங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் வேண்டும்—சுயாட்சி வழங்கப்படவேண்டும் என்பவை பிரதானமான கோரிக்கைகளாகும்.

தென் சுமத்திரா

இப்போது கிளர்ந்தெழுந்துள்ள தென் சுமத்திராதான் இந்தோனேஷியாவிலேயே அதிகமான எண்ணெய் உற்பத்தி செய்யப்படும் பிரதேசமாக இருக்கிறது. இங்கும் இராணுவம், ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டுவிட்டதால் சுகர்ணோ சர்க்கார் பெரும் திகிலடைந்திருக்கிறது.

கர்னல் பார்பியன் என்ற இராணுவ அதிகாரியை 'புரட்சிக் கவுன்சில்', அதிகாரத்தை மேற்கொள்ளுமாறு கூறியது என்றும், 'தென் சுமத்திரா மாநிலத்தின் நலனில் சுகர்ணோ சர்க்கார் கிஞ்சிற்றும் கவலை கொள்ளவில்லை; மேலும், சுமத்திராவைக் கவனிப்பதற்கு மத்திய சர்க்காருக்கு அருகதையும் இல்லை' என்றும் 'புரட்சிக் கவுன்சில்' கருதுவதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மத்திய சர்க்காரைப் பணியவைப்போம்

"தென் சுமத்திரா தங்களுடன் புரட்சியில் ஈடுபட்டால் மத்திய சர்க்காரை நம்மிஷ்டத்திற்கு நாம் ஆட்டிவைக்க முடியும்"

என்று இதர மாநிலங்களில் உள்ள 'புரட்சிக் கவுன்சில்' உறுப்பினர்கள் கூறியிருந்தனர்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 12—3—57 செவ்வாய்

டெல்லிபெரியவர்களுக்கு ‘சோதனை’

★

புதுவை, காரைக்கால் பகுதிகள் பரிபூரணமாகச் சுதந்திரம் பெறுவதற்கு பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் இணங்க மறுப்பதுபோலத் தெரிகிறது.

கடந்த ஆண்டு மே திங்கள் 28-ம் நாளன்று புதுவை, காரைக்கால் பகுதிகளின் அதிகார மாற்றம் குறித்துப் பிரெஞ்சு சர்க்கார் டெல்லி சர்க்காருடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை ஏற்கப் பிரெஞ்சு சபை மறுக்கிறதாம்.

‘இந்தச் சபை ஆலோசனை கூறுவதற்கு மட்டுமே அதிகாரமுடையது; இதன் தீர்மானங்கள் பிரெஞ்சு சர்க்காரைக் கட்டுப்படுத்த மாட்டா’ என்று கூறப்பட்டாலும் இந்தச் சபையின் போக்கை அலட்சியப்படுத்திவிடுவதற்கோ அல்லது இன்றைய பிரெஞ்சு சர்க்காருக்கு இந்தச் சபையின் கூற்றில் நம்பிக்கை இல்லை—பங்கு இல்லை என்று கொள்வதற்கோ இடம் இல்லை.

புதுவை, காரைக்கால் பகுதிகள், உண்மையில் பிரெஞ்சு சர்க்காரின் பிடிப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு டெல்லி சர்க்காரின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசமாக, சென்ற ஆண்டிலேயே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்மூலம் மாறிவிட்டன. ஆனும் அதிகாரங்கள் நடைமுறையில் கைக்கு வந்துவிட்டபோதிலும் இந்த அதிகார மாற்றம் சட்டபூர்வமாக உறுதி செய்யப்படும்வரை புதுவை—காரைக்கால் பகுதிகள் பிரெஞ்சுப் பிடிப்பிலிருந்து பரிபூரணமாக விடுவிக்கப்பட்டனவாக ஆகிவிட முடியாது.

எனவே, இந்த நிலையில், பிரெஞ்சு சபையின் கருத்து அலட்சியத்திற்குரியதல்ல. மேலும், பிரெஞ்சு சர்க்கார் ஒப்பந்தப்படி இந்தத் திட்டுகளின் அதிகார கைமாறுதலை சட்டபூர்வமானதாக உறுதி செய்து தருவதில் இத்தனை நாள் காலங் கடத்திவந்திருப்பதிலிருந்து, ஆலோசனை சபையின் கருத்தில் பிரெஞ்சு சர்க்காருக்கு நிச்சயம் பங்கு உண்டு என்பதை எளிதில் யூக்கலாம்.

தங்கள் பிடிப்பிலிருந்த புதுவை-காரைக்கால் மக்கள் விடுதலை கோரி கிளர்ந்தெழுந்து போராடியபோது, அவர்களது சுதந்திரப் போராட்டத்திற்குப் பணிய ஒப்புக்கொண்டுவிட்டு, இப்போது சட்டரீதியான அதிகாரமாற்றம் பற்றி சஞ்சலப்படுவதேன்? அன்று உலகில் இருந்த சூழ்நிலைகளில் தங்கள் தாயகத்தின் பெயருக்கு ஏற்பட்டிருந்த களங்கத்தைத் துடைத்துக்கொள்ளும்வகையில் பேசி செயல்பட்ட பிரெஞ்சு அரசியல்வாதிகள், இப்போது பழைய நிலைக்குத் திரும்பிச் செல்ல விழைவது ஏன்? மண்ணாசை இன்னும் விட்டபாடில்லை என்பதைத் தவிர, வேறு என்ன காரணம் கூறப்போகின்றனர், அவர்கள்? அல்லது, ‘உலகின் கண்ணில் மண்ணைத் தூவத்தான் டெல்லியுடன் அப்படி ஒரு ஒப்பந்தத்தை மேற்கொண்டோம்’ என்று கூறப்போகிறார்களா என்பதும் தெரியவில்லை.

பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் என்ன காரணம் கூறுவதாயினும், ஓராண்டிற்குமுன் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தின் நோக்கத்தையே சவாலுக்கு அழைக்கும் வகையில் இன்று பிரெஞ்சு சபையினர் கருத்தறிவிப்பது, நாகரிகமான அரசியலாகாது.

பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளின் இந்தப் போக்கிற்கு, டெல்லி சர்க்காரும் தங்கள் பங்கினைச் செலுத்தியிருக்கின்றனர் என்றுதான் நேர்மையான அரசியல் பார்வையாளர்கள் கூறுவர்.

துவக்கமுதலே டெல்லிப் பெரியவர்கள், புதுவை-காரைக்கால் பகுதிகள் பிரெஞ்சு பிடிப்பிலிருந்துவிடுவிக்கப்பட வேண்டும் என்பதில் நியாயமாகக் காட்டவேண்டிய அக்கரையைக் காட்டவில்லை என்று, அந்தப் பகுதி மக்கள் உள்ளத்தின் ஒரு ஓரத்தில், குறை சேர்த்து வந்திருக்கின்றனர்.

நடைமுறை அதிகாரமாற்றம் தங்களின் ஆவேசமான எழுச்சிக்குப் பிறகு நடைபெற்றது கண்டு மகிழ்ந்த அவர்கள், இனிமேலும்—சட்டபூர்வமான அதிகாரமாற்றத்திற்கேனும் டெல்லிப் பெரியவர்கள் துணைபுரிவர் என்று நம்பிக்கிடந்தனர். ஆனால் வழக்கம்போலவே டெல்லிப் பெரியவர்கள், ‘புதுவைப் பகுதியில் வாழ்வோர் திராவிடர்தானே’ என்ற எண்ணத்தினாலோ என்னவோ, சட்டபூர்வமான அதிகார மாற்றத்திற்குத் தீவிரமாகப் பணியாற்றத் தவறிவிட்டனர். பிரெஞ்சுக்காரர்களின் போக்கில் புதுவை மக்களுக்கு ஏற்படக்கூடிய அதிருப்தியில் எள்ளளவும் குறையாததாகவே இருக்கும், அவர்கள் டெல்லிப் பெரியவர்கள்மீது கொள்ளும் அதிருப்தியும்!

டெல்லிப் பெரியவர்களின் இராஜதந்திரம் திறமையானதாக இருக்கவில்லை என்பதையாவது, அல்லது புதுவையின் சட்டபூர்வமான மாற்றத்திற்கு அவர்கள் துரிதமாகச் செயல்படவில்லை என்பதையாவது ஒப்புக்கொள்ள வேண்டிய ‘சோதனை’யைத் தோற்றுவித்திருக்கின்றனர் பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள்! அவர்களது புதிய போக்கிற்குக் காரணம் கூட இந்தச் சோதனையில் டெல்லிப் பெரியவர்களை இறக்கிவிடுவதுதானோ என்னவோ?

எப்படியாயினும், பிரெஞ்சுப் போக்கு மிக அநாகரிகமானது என்று நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன், உடனடியாக, மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தப்படி புதுவையின் சட்டபூர்வ மாற்றத்திற்கு ஒப்பவேண்டும். அவர்களை ஒப்பச்செய்வதற்கு, டெல்லி சகல வழிமுறைகளையும் கையாளவேண்டும் என்றும் எடுத்துரைக்கிறோம்.

‘வலையில் விழுந்தோர்’ எண்ணிக்கை காணாதாம்!

அமெரிக்க மந்திரி டல்லஸ் கூறுகிறார்

லண்டன், மார்ச் 9—

‘சீட்டோ’வில் இடம் பெற்றிருக்கும் நாடுகளின் எண்ணிக்கை போதாதாம்!

இன்னும் அதிகமான நாடுகள் இடம் பெற வேண்டுமென அமெரிக்க மந்திரி டல்லஸ் ‘சீட்டோ’ கூட்டம் ஒன்றில் பேசும்போது கோருவாராம்!

‘சீட்டோ’ நிறுவப்பட்ட நோக்கம் ஈடேற வேண்டுமானால் இலங்கை, பர்மா, வியட்நாம் ஆகிய நாடுகள், அதில் சேர்ந்தாக வேண்டுமென டல்லஸ் கருதுகிறாராம்!

இந்த நாடுகளுக்கு, நடைபெறும் ‘சீட்டோ’ கவுன்சில் கூட்டத்திலிருந்து அவர் அழைப்பு விடுப்பாராம்!

‘இந்த நாடுகள் ‘சீட்டோ’வில் சேராவிட்டால் அதன் நோக்கம் ஈடேறாது’ என்று அவர், இதர ‘சீட்டோ’ உறுப்பினர்களுக்குக் கூறுவாராம்!

இம்ரே நாகியின் கதி என்ன?

வியன்னா, மார்ச் 11—

ஹங்கேரியின் முன்னாள் பிரதமரான இம்ரே நாகியும் அவருடன் மற்றும் பல தலைவர்களும் சிறுய் பகுதியிலிருந்து சுமார் 70 கல் தொலைவுக்கு அப்பாலுள்ள ருமேனியத் தலைநகரான புகாரெஸ்டுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றனராம்.

கடந்த நவம்பரில் இம்ரே நாகியும், அவருடன் மற்றும் பல ஹங்கேரித் தலைவர்களும் புதாபெஸ்டில் யூகோஸ்லேவியரிடம் அடைக்கலம் புகுந்திருந்தபோது, புதாபெஸ்டின் மீது தாக்குதல் நடத்திய ரஷ்யத் துருப்புகள், இம்ரே நாகியையும் மற்றவர்களையும் கைது செய்து சிறைக்குக் கொண்டுச் சென்றனர்.

அப்படிக் கொண்டுபோன கைதிகளையெல்லாம் இருபிரிவினராக்கி, இம்ரே நாகி மற்றும் பல ஹங்கேரித் தலைவர்கள் அடங்கிய ஒரு பகுதியினரை புகாரெஸ்டுக்கும் மற்றொரு பிரிவினரை புதாபெஸ்டுக்குக் கொண்டு சென்றனர் என்றும் தெரிகிறது.

இம்ரே நாகியும், அவருடன் அழைத்துச் செல்லப்பட்டவர்களும் மீண்டும் ஹங்கேரிக்கு அழைத்து வரப்படுவதாக இருந்தால் அவர்கள் மீது இராஜத் துரோகக் குற்றம் சாட்டப்படவே கொண்டுவரப்படுவர் என இங்குள்ள அரசியல் வட்டாரங்கள் நம்புவதாகவும் கூறப்படுகிறது.

நில நடுக்கத்தின் எதிரொலி!

கடலின் கீழிருந்த பவளப் பாறைகளும் தென்பட்டனவாம்

அலூஷியன் தீவுப் பகுதியில் ஏற்பட்ட பயங்கர நில நடுக்கத்தின் காரணமாக பசிபிக் கடல் கொந்தளித்து, ஹவாய் தீவுகளையும், மற்றத் தீவுகளையும் தாக்கிய தென்றும் கிழக்கே போர்பாங்க்ஸ் அலாஸ்கா ஆகிய பகுதிகளிலும் இலேசான நில நடுக்கத்தை உண்டுபண்ணியதென்றும்தெரிய வருகிறது.

இதன் காரணமாக ஏற்பட்ட கடல் கொந்தளிப்பினால் ஹவாய் தீவில் நீர் கரையில் மோதி பின்னுக்குச் சென்றபோது கடலின் அடிப்பாகத்திலிருந்த பவழப் பாறைகள் வெளியே தெரிந்ததென்றும் கூறப்படுகிறது.

‘இந்த அலூஷியன் நில நடுக்கம் ஏற்பட்ட இடத்தருகே மக்கள் இருந்திருப்பார்களேயானால், அவர்கள் உயிரோடு இருக்கமாட்டார்கள்’ என்று அதிகாரியொருவர் கருத்தறிவித்திருக்கிறாராம்.

1946-ம் ஆண்டில் ஏற்பட்ட கடற் கொந்தளிப்பில் 200 பேர் இறந்தனர் என்பது நினைவிற் கொள்ளத்தக்கது.

காஷ்மீர் பிரச்சினை

ஐ. நா. பிரதிநிதி ஜாரிங்குடன் பாக். பிரதமரே விவாதிப்பார்

கராச்சி, மார்ச் 11—

காஷ்மீர் பிரச்சினை சம்பந்தமாக விவாதிப்பதற்கு மார்ச் 14-ந் தேதியன்று கராச்சிக்கு வரும் ஐ. நா. பிரதிநிதி ஜாரிங்குடன், தகராறு சம்பந்தப்பட்ட பிரச்சினையில் பாகிஸ்தான் பிரதம மந்திரியே நேரில் பேச்சு வார்த்தை நடத்துவாராம்!

இரயில்வேக்களின் மூலம் செலவுபோக ரூ. 23 கோடி மிஞ்சும்

புதிய மதிப்பீட்டிற்குபின் நிலைமை

புதுடில்லி, மார்ச் 10—

இந்திய இரயில்வேக்களில் இந்த நடைமுறை ஆண்டில், சுமார் ரூ. 23 கோடி ‘இலாபம்’ கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறதாம்!

இந்த வருமானம், பிரயாணிகள் மற்றும் சாமான்களுக்குக் கட்டணம் அதிகரிக்கப்பட்டிருப்பதாலும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

இந்த அதிகரித்த வருமானம், எதிர்பார்க்கப்படும் அதிகச் செலவுகளுக்குத் தொகை ஒதுக்கப்பட்ட. பின்னும் கிடைப்பதாகும் என்று கூறப்படுகிறது.

மலைநாட்டு மக்களுக்கு கான்சாகிப் கோரிக்கை

லாகூர், மார்ச் 10—

‘காஷ்மீரை நோக்கி ஆயுதபாணிகளாக மலைநாட்டு மக்கள் செல்வது’ என்ற, மலைநாட்டு மக்களின் நடவடிக்கைக் குழு மேற்கொண்ட முடிவை தற்காலிகமாக ஒத்திவைக்குமாறு மேற்கு பாகிஸ்தான் முதலமைச்சர் டாக்டர் கான்சாகிப் கேட்டுக் கொண்டிருக்கிறாராம்.

‘வெகு விரைவில் ஜாரிங் குழு இங்குவர இருப்பதால் அதற்குள்ளாகவே, தங்கள் நடவடிக்கைக்கு நாள் குறிப்பது நல்லதல்ல’ என்று அவர், மேற்படி குழுவினருக்கு விடுத்துள்ள குறிப்பொன்றில் விளக்கியிருக்கிறாராம்.

ஆயுதபாணிகளாகச் செல்லும் தங்களுக்கு சர்க்கார் அதிகாரிகளும் பிரதம மந்திரியும் தேவையான அளவு பாதுகாப்பும் வசதிகளும் செய்து தர வேண்டுமென ஏற்கனவே கேட்டிருந்தது அறிந்ததேயாகும்.

ஓட்டுப் பெட்டிகளின் இலட்சணம் அம்பலம்!

சென்னை, மார்ச் 8—

சென்னை சட்டசபை மயிலாப்பூர் தொகுதிக்கான ஆழ்வார்பேட்டை செயின்ட் எபினேஷியஸ் பாடசாலையில் அமைக்கப்பட்ட 69-ம் எண்ணுள்ள ஓட்டுச் சாவடியில் ஓட்டுப் பதிவு முடிந்தவுடன் பெட்டியை மூடிவிட்ட பிறகு சீல் வைப்பதற்கு முன்னர் அதிகாரிகள் அபேட்சகர்களின் ஏஜெண்டுகளிடம், தங்கள் தங்கள் பெட்டிகள் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக்கொள்ளும்படி கூறினார்கள் என்றும், பி. சோ. அபேட்சகர் தோழியர் எஸ். விசயலட்சமிக்கும் தென் சென்னை பார்லிமெண்ட் சுயேச்சை அபேட்சகர் எச். டி. இராசாவுக்கும் ஏஜெண்டாக இருந்த கம்யூனிஸ்டு கட்சி தோழர்கள் வி. ஜி. இராசாமணி, சண்முகம் இருவரும் பெட்டியின் மூடியை இழுத்துப் பார்த்த பொழுது இலகுவாகத் திறந்து கொண்டதாகவும் இதைக்கண்ட தேர்தல் ஆபீசர்கள் திகைத்த வண்ணம் ஏதேதோ சாக்குப் போக்குக் கூறினர் என்றும் கூறப்படுகிறது.

—‘ஜனசக்தி’: 10—3—56

‘சீட்டோவு’க்கு அதிகாரமில்லை!

ஸ்ரீநகர், மார்ச் 10—

“காஷ்மீர் பிரச்சினை குறித்து விவாதிக்கவோ அன்றி முடிவு தெரிவிக்கவோ ‘சீட்டோ’வுக்கு சட்டப்படி—அரசியல் முறைப்படி உரிமையுமில்லை; அதிகாரமுமில்லை. அவ்விதம் முடிவு கூறுவது இந்தியாவின் அரசாங்க உரிமையை போட்டிக்கிழுத்து, அதன் உள்நாட்டு விவகாரத்தில் குறுக்கிடுவதாகும். அப்படிச் செய்வதை இந்தியர் எவரும் எந்தச் சந்தர்ப்பத்திலும் சகித்துக் கொள்ள முடியாது”

—என்று காஷ்மீர் கல்வியமைச்சர் குலாம் முகமது சாதிக் கூறியுள்ளார்.

“காஷ்மீர் பிரச்சினையை ‘சீட்டோ’வில் கொண்டுவருவதே இந்தியாவின் தலைவாசலுக்கு யுத்தக்களத்தை கொண்டுவந்துவிடுவதாகும்,” என்றும் சாதிக் எச்சரித்துள்ளார்.

‘நயா பைசா’ விலையில் தபால் கார்டுகள்

மக்கள் கவனத்திற்கு ஒரு குறிப்பு

புதுடில்லி, மார்ச் 10—

ஏப்ரல் திங்கள் முதல் தேதியிலிருந்து புது நாணய முறை—‘நயா பைசா’ அமுலுக்கு வருகிறதென்று அறிவிக்கப்பட்டதையொட்டி அன்று முதல் தபால் கார்டுகள், கவர்கள் நயா பைசா நாணய முறைப்படி விலைகள் நிர்ணயிக்கப்படுமெனத் தெரிய வருகிறது.

தபால் கார்டு 5 நயா பைசா; உள்ளூர் (லோகல்) தபால் கார்டு 3 நயா பைசா; தபால் கவர் 13 நயா பைசா ஆக விற்கப்படுமாம்.

ஒரே உருவம் பொறித்த ஸ்டாம்புகள் பல்வேறு விலைகளில் வெளியிடப்படுமென்றும், 1, 2, 3, 5, 6, 10, 13, 20, 25, 50, 75 நயா பைசா ஆகிய விலைகளில் ஸ்டாம்புகள் வெளியிடப்படுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

1, 2, 5, 10, 15 ரூபாய் ஆகிய விலை மதிப்புகளில் தற்போதுள்ள ஸ்டாம்புகள் நீடிக்கப்படுமாம்; அவை மாற்றப்படமாட்டாதாம்.

தபால் கார்டு, கவர் வாங்க விரும்புவோர், இப்போது புழக்கத்திலுள்ள நாணயங்களையோ ‘நயா பைசா’ நாணயங்களையோ கொடுக்கலாமாம்.

பி. சோ. கட்சியிடம் துணை மந்திரி தோல்வி!

உத்திரப் பிரதேச சட்டசபைத் தேர்தலில், பி. சோ. கட்சி அபேட்சகர் கோவிந்த நாராயண தேவாரி என்பார் துணை மந்திரி சதுர்புஜ சர்மாவைத் தோற்கடித்திருக்கிறார்.

இலங்கைவாழ் 'இந்தியர்' பற்றி பண்டாரநாயகா கருத்து என்ன?

கொத்தலாவலே தெளிவாக்குகிறார்!

கொழும்பு, மார்ச் 10—

இலங்கையிலுள்ள கம்யூனிஸ்டுகளுக்கு பண்டாரநாயகா சர்க்கார் ஆதரவு தருவது குறித்து முன்னாள் இலங்கைப் பிரதமரான சர். ஜான் கொத்தலாவலே பெருத்த கண்டனக் குரல் எழுப்பியிருக்கிறார்.

இலங்கையில் கம்யூனிச இயக்கத்தின் வளர்ச்சிக்கு சர்க்கார் துணிகரமான ஆதரவு தருவது கண்டனத்திற்குரியது என்று, அவர், இங்கு நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சிக் கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

"இலங்கையின் சுதந்திரம் அகில உலகக் கம்யூனிசத்தால் அச்சுறுத்தப்படுமானால், அதனை இந்தியா பார்த்துக்கொண்டு வாளா இருக்காது. இந்தியாவின் வடஎல்லைப் பகுதியிலுள்ள திபேத்தில் ஏற்கனவே செஞ்சீனா தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொண்ட முறைகள் பற்றி இந்தியா வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறது. அதேபோலவே, இந்தியா, தனது தெற்கு எல்லைக்கு மிக அருகிலிருக்கும் ஒரு இடத்தில் மற்றொரு கம்யூனிச ஆதிக்க இடம் அமைவதை ஒருபோதும் வரவேற்கப்போவதில்லை. இந்தியா, இந்த விஷயத்தில்கொண்டிருக்கிற பயம், அர்த்தமுடையதேயாகும். அப்படியானால் இலங்கையின் கதி என்னவது? அகில உலகக் கம்யூனிசப் பிடிப்பிலிருந்து இலங்கை காப்பாற்றப்படவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக, இலங்கை, அண்மையிலிருக்கும் பலம் வாய்ந்த இந்தியாவின் பாதுகாப்பிற்குள் அடைக்கலம் புகுவதா?"

என்று சர். ஜான் கொத்தலாவலே அவர்கள், கம்யூனிச ஆதரவின் விளைவுகள் குறித்துத் தமது கருத்துக்களை வெளிப்படுத்தினாராம்.

மேலும் அவர் பேசுகையில், 'இலங்கையைவிட்டு கடைசி இந்தியன் வெளியேறின பிறகு, தாம் மகிழ்ச்சியுடன் சாகப்போவதாக பண்டாரநாயகா முன்னால் கூறியிருக்கிறார்; ஆனல் இப்படிப்பட்டதொரு நிலை ஏற்பட்டுவிடுமானல் அவர் என்ன சொல்வார்?' என்றும் அவர் கேள்வி எழுப்பியிருக்கிறாராம்!

"ரஷ்யாவிலோ சைனாவிலோ கம்யூனிச ஆதிக்க சர்க்கார் இருப்பது குறித்து இந்தியா கவலை கொள்ளவில்லை; ஆனல் இந்தியாவிலுள்ள கம்யூனிச இயக்கம், பிறநாடுகளிலிருந்து உதவியோ, ஆதரவோ பெறுவது குறித்து நேரு சர்க்கார் கவனஞ்செலுத்தி வருகின்றனர். ஆனல் இங்கு நமது நாட்டிலோ, 'கம்யூனிஸ்டுகளைப்பற்றிக் கவலைப்படாதீர்கள்; அவர்களெல்லாம் நமது நண்பர்கள்தான்' என்று கூறுகிறாரே இதன் விளைவு என்னவாயிருக்கும் என்று கருதுகிறீர்கள்?"

இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர் இறுதியில், 'இத்தகைய ஒரு சர்க்காரை பதவியிலிருந்து விரைவில் விரட்டியடிக்காவிட்டால், நமது நாட்டை அகில உலக கம்யூனிச ஆதிக்கப்பிடிப்பிலிருந்து விலங்குவது முடியாததாகிவிடும்' என்றும் குறிப்பிட்டாராம்.

★

கொத்தலாவலேமீது குற்றச்சாட்டு?

கொழும்பு, மார்ச் 11—

இலங்கை மக்கள் பிரதிநிதித்துவச் சபை உறுப்பினர்களை அவமதித்துப் பேசுவதின் மூலம் நேர்மைக்குப் பங்கம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டுக்கு இலங்கையின் முன்னாள் பிரதமரான சர். ஜான் கொத்தலாவலே ஆளாக்கப்படுவார் என்று தெரிகிறது.

நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சிக் கூட்டம் ஒன்றில் கொத்தலாவலே பேசும்போது, தாம் பாராளுமன்றக் கூட்டங்களில் கலந்துகொள்வதற்கான காரணம் பற்றிக்குறிப்பிடுகையில், 'பாராளுமன்றத்தின் உறுப்பினர்களில் பெரும்பாலானவர்களும் நாகரீகம் தெரியாத 'மரமேறி'களாக இருப்பதுதான்' என்று குறிப்பிட்டாராம்! அவர்களுக்கெல்லாம் சிங்கள மொழியையே எப்படிப் பேசுவதென்று தெரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டதாக இதழ் ஒன்று கூறியிருக்கிறது!

மேலும் அவர் பேசுகையில், தாம் பாராளுமன்றக் கூட்டங்களில் கலந்துகொள்வதாக இருந்தால் ஒருசில உறுப்பினர்களை—தேவையானல் பிரதம மந்திரியைகூட தாக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டு, பாராளுமன்றத்திலிருந்தே அவர்களை வெளியே தூக்கி எறியவேண்டிய நிலை ஏற்படும்' என்றும் குறிப்பிட்டதாகவும் அச்செய்திக் குறிப்பில் காணப்படுகிறது.

சர். ஜான் கொத்தலாவலேயின் இந்தக் கூற்றுகளைத் தாம் மிக உன்னிப்பாகக் கவனித்துள்ளதாகவும், அவை, பிரதிநிதித்துவச் சபையையும் அதன் உறுப்பினர்களையும் அவமதிப்பதாக இருப்பதால் அவைகளை வெகு தீவிரமாகக் கவனிப்பதென முடிவு செய்துள்ளதாகவும் பண்டாரநாயகா கூறியிருக்கிறாராம்.

'தங்கள் உயிர்களையும் திரணமாக மதித்து — அர்ப்பணிக்கத் துணிந்து 100 தொண்டர்களேனும் தம்முடன் சேருவார்களானல், தாம், அவர்களுக்கெல்லாம் இரண்டே நாட்களில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான பயிற்சிகளையெல்லாம் கற்றுத் தர முடியும் என்ற சர். ஜான் கொத்தலாவலேயின் கூற்றையும் பண்டாரநாயகா சுட்டிக் காட்டி, எச்சரிக்கை விடுத்திருக்கிறாராம்.

தென் சுமத்திராவில் இராணுவ ஆட்சிப் பிரகடனம்?

ஜகார்தா, மார்ச் 10—

தென் சுமத்திராவின் நிர்வாகத்துறை அதிகாரம் அனைத்தையும் தாம் மேற்கொண்டுவிட்டதாக இராணுவ அதிகாரி வெளியிட்ட வானொலிச் செய்தி ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

சுமத்திரா மத்திய சர்க்காருடைய ஒரு முடிவுக்கிணங்கவே தென் சுமத்ரா மாகாண நிர்வாகத்துறை இராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

பிரிவுச் சக்திகளினின்றும் நாட்டை மீட்கவே தாம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதாகவும், இப்போதிருக்கிற நிலைமை, நாட்டின் சமூகமான நிலைமைக்குப் பங்கம் விளைவிப்பதாக உள்ளதென்றும் அவர் கூறினாராம்.

குடியரசுத் தலைவரான டாக்டர் சுகர்னோ தமக்கு அளித்துள்ள அதிகாரவரம்பிற்கு உட்பட்டே தாம் இதுபோன்ற நடவடிக்கைகளில் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அவர் அறிவித்திருக்கிறாராம்.

தூக்கிலிடும் முறை ஒழிக்கப்படும்?

நிதி அமைச்சர் கேள்வி

இலண்டன், மார்ச் 11—

"கொலைத் தண்டனையை நிறைவேற்றுவதற்குத் தூக்கிலிடுவதைத் தவிர வேறு ஏதேனும் முறை கண்டு பிடிக்கப்படுமானல் தூக்கிலிடும் முறையை பிரிட்டிஷ் அரசாங்கம் ஒழித்துவிடத் தயாராக இருக்கிறது' என்று பிரிட்டிஷ் நிதி அமைச்சர் கில்மூர் பிரபு பிரபுக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

திருமணம்

13—3—57 காலை 9-30 மணிக்கு வடகரை கிராமம் பெருமாள் கோவில் தெரு, எண் 126 இல்லத்தில் தோழர் வி. எம். செயராமன்—தோழியர் டி. விசாலம்மாள் திருமணம் தோழர் ஆர். ஜார்ஜ் தலைமையில் நடைபெறும். தோழர்கள் எஸ். வி. சுப்பையா, சி. எம். எம். சாமி, டி. பரமானந்தம், சேசவன், எல். ஜோசப், மாணவி டி. எசோதா ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தக் கையாளும் முறை

மகளிர் உடல்நலனை சீர்குலைக்கும்?

அலட்சியமான முறையில் முடிவுசெய்யக் கூடாது

ஹாங்காங், மார்ச் 11—

"மக்கள் தொகைப் பெருக்கத்தைத் தடுத்து நிறுத்த கருச்சிதைவு முறையைச் செஞ்சீனா அரசாங்கம் கடைப்பிடித்தால் அபாய விளைவுகள் ஏற்படும்" என்று, சீனப் பொதுச்சுகாதாரத் துறைத் தலைமை அதிகாரி லீ-சின்-ஷெங் அம்மையார் எச்சரிக்கை செய்துள்ளாராம்.

"கருச் சிதைவுமுறை பெண்களின் உடல்நலனைக் குலைக்கக்கூடியதென மருத்துவச்சாலைகளிடமிருந்து கிடைத்துள்ள புள்ளி விவரங்களும் மருத்துவ ஆராய்ச்சிகளும் கூறுகின்றன" என்று ஷெங் நினைவுபடுத்தினாராம்.

"சீனா 60 கோடி மக்களைக் கொண்ட நாடு. இந்நாட்டின் மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு கருச்சிதைவு முறையைக் கடைப்பிடிப்பதென அரசாங்கம் அலட்சியமான முறையில் முடிவு செய்துள்ளது. கருச்சிதைவு முறையையே சட்டவிரோதமாக்கிவிட வேண்டுமென நான் கூறவில்லை; இந்தமுறை மக்களிடம் சர்வ சாதாரணமாகப் பரவுவதற்கு அரசாங்கம் ஊக்கமளிக்கக் கூடாது; இதுவே எனது கருத்து. கருச்சிதைவுமுறை மக்களனைவருக்கும் இலவசமாகக் கிடைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யக்கூடாது. எவராவது கருவைச் சிதைத்துக்கொள்ள விரும்பினல், அதற்கு ஆகும் செலவை அவர்களே ஏற்கச் செய்யவேண்டும்" என்று ஷெங் மேலும் கூறியுள்ளாராம்.

18 வயதுக்கு முன்பே திருமணம் செய்யும் பழக்கம் அடியோடு மறையவேண்டும் என்றும், இதன் மூலம் ஓரளவுக்கு மக்கள் தொகை பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியுமென்றும் அவர் யோசனை கூறினர்.

ஆசிரியருக்குக் கடிதம்:

மிளகாய் ஏற்றுமதியில்

அரசாங்கத்தின் அக்கரை குறைவு

ஐயா!

சமீபத்தில் மதுரை, இராமனதபுரம், திருநெல்வேலி, திருச்சி முதலிய மாவட்டக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் மூலம் 2,500 டன் மிளகாய் வற்றலை கொழும்புக்கு ஏற்றுமதி செய்ய நமது சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். கிராமாந்திர மிளகாய் உற்பத்தியாளர்களுக்கு நல்லவிலை கிடைக்கப்பெற வேண்டுமென்ற நோக்குடனேயே கூட்டுறவுப் பண்டகசாலைகள் மூலம் ஏற்றுமதி அனுமதிக்கப் பெற்றிருக்கிறது. இந்த நோக்கத்தை முறியடிக்க கொழும்பு சர்க்கார், அங்குள்ள மொத்த விற்பனைப் பண்டகசாலைக்கே இறக்குமதி அனுமதித்திருப்பதில் அந்தப் பண்டகசாலை அங்குள்ள கண்டிரோல் விலைக்கு மிகவும் குறைவான விலைக்கே கேட்கிறார்கள். அந்தர் ஒன்றுக்கு ரூ. 150வரை விற்றாலும் நிர்ணய விலை ரூ. 145 அனுசரித்துக்கூட இந்தியாவின் மிளகாய் மகசூலை வாங்குவதற்கு முன்வரவில்லை. விலை வீழ்ச்சியினல் பாதிக்கப்பட்ட மிளகாய் விவசாயிகளின் பரிதாப நிலையைப் பயன்படுத்திக் கொண்டு தங்களின் அத்தியாவசியத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளத் திட்டமிட்டிருக்கிறார்கள். இலங்கைக்கு அனுமதி கொடுக்குமுன், சென்னை சர்க்காரும் மத்திய சர்க்காரும், கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் தாராள ஏற்றுமதிக்கு ஒப்பக்கொண்டிருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்காது. சென்னை மாகாணத்தில் மிளகாய் விலை வீழ்ச்சியுற்று உற்பத்தியாளர்கட்குப் பெருவாரியான நஷ்டம் ஏற்பட்டிருப்பதால் சென்னை சர்க்கார் இதில் உடனே தலையிட்டு அனுப்பியிருக்கும் 2,500 டன்களையும் அங்குள்ள நிலவரப்படி எல்லா வியாபாரிகளுக்கும் கிடைக்கப்பெறச் செய்தால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைக்க வழியிருக்கிறது. இந்தநிலையில், இங்குள்ள கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும் கிடைத்துள்ள ஏற்றுமதிக் கோட்டாக்களை பூர்த்தி செய்ய முடியாமலும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் மிளகாய் உற்பத்தியாளர்களின் மகசூலுக்கு நியாயமான விலை கிடைக்கப் பெறச் செய்யாமலும் இருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். சென்னைக் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளர் அவர்கள், இந்த நிலைமை உடனே கவனித்து ஆவன செய்வார்களா?

இராம சதாசிவம்
சவளப்பட்டி

சம்பாதித்துக்கொண்டே தொழில் கற்றுக்கொள்ள திட்டம்!

டாக்டர் இலட்சுமணசாமி தகவல்

சென்னை, மார்ச் 10—

சம்பாதித்துக்கொண்டே தொழில் கற்றுக்கொள்ளுதல் என்ற அடிப்படையில் சில கல்வித் திட்டங்கள்—அதுவும் குறிப்பாகத் தொழிற் கல்வித் திட்டங்கள், அகில இந்திய தொழிற் கல்விக் குழுவின் பரிசிலனையிலிருப்பதாக டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்கள் கூறியுள்ளார்.

இப்போது 'கெமிகல் என்ஜினீயரிங்', 'கெமிகல் டெக்னாலஜி' போன்ற இரண்டாண்டு பட்டப் படிப்பிற்குப் பதிலாக நான்கு ஆண்டு தொழிற் கல்விப் பட்டப் படிப்பிற்கு வழிசெய்யும் திட்டம் ஒன்றை 'அகடமிக் கவுன்சில்' ஏற்றுக்கொண்டிருக்கிறது. இந்தக் கவுன்சில் கூட்டத்தில் பேசுகையிலேயே டாக்டர் இலட்சுமணசாமி அவர்கள் மேற்கண்ட தகவலைத் தந்திருக்கிறார்.

பர்மாவிற்கு ரூ. 20 கோடி கடன் தர டெல்லி சர்க்கார் முடிவு

பர்மாவிற்கு ரூ. 20 கோடி கடன் தருவதென டெல்லி சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்களாம்!

இதற்கான ஒப்பந்தம் இன்னும் இரண்டொரு நாட்களில் கையெழுத்தாகும் என்றும் தெரியவருகிறது.

முன்பு 1955 அக்டோபரில் கையெழுத்தான கடன் ஒப்பந்தப்படி, 1956 செப்டம்பருக்குள் பர்மா கடனைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளவில்லை என்றும், அதனல் ஒப்பந்தம் முறிந்தது என்றும் அந்தக் கடனை இப்போது பெற்றுக்கொள்வதற்காகவே புதிய ஒப்பந்தம் என்றும் கூறப்படுகிறது.

இந்தக் கடனை தடவைக்கு ஐந்து கோடி ரூபாயாக நான்கு தடவைகளில் பர்மா பெற்றுக்கொள்ளும் என்றும் 1959-ம் ஆண்டுக்குப் பிறகு தவணைகளில் இரண்டரை கோடி ரூபாய் வீதம் 4 சதவிகித வட்டியுடன் திருப்பித் தந்துவிடும் என்றும் கூறப்படுகிறது.

மேற்கு நாடுகளின் யோசனை நிராகரிப்பு

கெய்ரோ, மார்ச் 11—

சூயஸ் கால்வாயில் செல்லும் கப்பல்கள், கட்டணத்தில் பாதியை எகிப்திடமும், மற்றொரு பகுதியை உலகப் பாங்கியிடமும் செலுத்தலாமென்று மேற்கு நாடுகள் கூறியிருந்த யோசனையை எகிப்து அரசாங்கம் நிராகரித்துவிட்டது. கட்டணத்தின் முழுப் பகுதியையும் எகிப்து அரசாங்கத்திடம் செலுத்தும் நாடுகளின் கப்பல்கள் மட்டுமே சூயஸ் கால்வாய் வழியாகச் செல்ல அனுமதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் இராணியிடம் பண்டித நேரு மன்னிப்புக் கேட்டது ஏன்?

கம்யூனிஸ்டுத் தலைவர் கண்டனம்

கல்கத்தா, மார்ச் 9—

காங்கிரஸ் இதழ் ஒன்றில் பிரிட்டிஷ் இராணியைப் பற்றிக் கண்ணியக் குறைவாக எழுதப்பட்டிருந்ததற்காக பண்டித நேரு மன்னிப்புக் கேட்டுக்கொண்டாரல்லவா?

'அப்படி மன்னிப்புக் கேட்டிருக்கத் தேவையில்லை' என்று கம்யூனிஸ்டுத் தலைவர் அஜாய் கோஷ் கூறியிருக்கிறாராம்!

50 கோடி பவுன் நஷ்ட ஈடு?

சூயஸ் கால்வாய் தகராறையொட்டி எகிப்து நாட்டைத் தாக்கியதற்காக பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளிடம் எகிப்து, 50 கோடி பவுன் நஷ்ட ஈடு கோருவதற்கு உத்தேசித்திருக்கிறதாம்.

எதேச்சாதிகாரத்திற்கு எதிராகக் கழகம் நடத்திய போராட்டம்

தேர்தலில் தி.மு.க. அபேட்சகர்கள் பெற்ற வாக்கு விபரங்கள்

தேர்தல் முடிவுகள் குறித்து மேலும் சில தொகுதிகளிலிருந்து தகவல்கள் கிடைத்துள்ளன.

தூத்துக்குடி தொகுதியில் தி.மு. கழக அபேட்சகராகப் போட்டியிட்ட தோழர் எம். எஸ். சிவசாமி அவர்களைவிட 2,140 வாக்குகள் மட்டுமே அதிகம் பெற்று காங்கிரஸ் அபேட்சகர் வெற்றியடைந்திருக்கிறார். காங்கிரஸ் அபேட்சகருக்கு 17,438 வாக்குகளும் தோழர் சிவசாமி அவர்களுக்கு 15,298 வாக்குகளும் பதிவாகியிருக்கின்றன.

சேலம் மாவட்டம் சேந்தமங்கலம் தொகுதியிலும், நமது கழக அபேட்சகர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்களுக்கு 16,959 வாக்குகளும், காங்கிரஸ் அபேட்சகருக்கு 23,749 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன.

விழுப்புரம் தொகுதியில் கழக அபேட்சகரான எம். சண்முகம் அவர்களைவிட மிகச் சில வாக்குகள் மட்டும் அதிகம்பெற்று காங்கிரஸ் அபேட்சகர் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. 853 வாக்குகள் வித்தியாசத்தில் காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெற்றிருக்கிறார். தோழர் சண்முகம் அவர்களுக்கு 24,147 வாக்குகளும், காங்கிரஸ் அபேட்சகருக்கு 25,000 வாக்குகளும் பதிவாகியிருக்கின்றன.

சென்னை திருவல்லிக்கேணி தொகுதியில் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை அவர்களை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகர் ஹாஜா ஷெரீப் 1,015 வாக்குகள் மட்டும் அதிகம் பெற்று வெற்றி பெற்றிருக்கிறார்.

கடலூர் தொகுதியில் கழக அபேட்சகர் தோழர் இரா. இளம்வழுதி அவர்களைவிட சுமார் 8,000 வாக்குகள் அதிகம் பெற்று காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

மற்றும் பொன்னேரி (இரட்டைத் தொகுதி), கடம்பூர் (தனித் தொகுதி) நாமக்கல் (இரட்டைத் தொகுதி) உளுந்தூர்பேட்டை ஆகிய தொகுதிகளில் கழக அபேட்சகர்களைவிட அதிகமான வாக்குகள் பெற்று காங்கிரஸ் அபேட்சகர்கள் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சென்னிமலை தொகுதியில் சோஷலிஸ்டுக் கட்சி அபேட்சகர் தோழர் நல்லசிவம் காங்கிரஸ் அபேட்சகரைவிட சுமார் 7,000 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றியடைந்திருக்கிறார்.

திருவாடானை தொகுதியிலும் காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி அபேட்சகர் தோழர் சசிவர்ணத் தேவர் அவர்கள் காங்கிரஸ் அபேட்சகரைவிட சுமார் 4,500 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றியடைந்திருக்கிறார்.

கழகம் போட்டியிடாத மற்றத் தொகுதிகளில், ஓசூர் தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகரைவிட 1,000-த்திற்கும் அதிகமான வாக்குகள் பெற்று சுயேச்சை அபேட்சகரான கே. அப்பாவு வெற்றி பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

செங்கற்பட்டு தனித் தொகுதியில் கழக ஆதரவு பெற்ற தோழர் ஏ. இரத்தினம் அவர்களைவிட சுமார் 4,000 வாக்குகள் மட்டும் அதிகம் பெற்று காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

செங்கற்பட்டு பொதுத் தொகுதியில் காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி அபேட்சகர் தோழர் எம். ஆர். இராமச்சந்திரன் அவர்களைவிட காங்கிரஸ் அபேட்சகர் முத்துசாமி சுமார் 4,000 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றிருக்கிறார்.

பழனி தொகுதியில் சுயேச்சை அபேட்சகரைவிட சுமார் 2,500 வாக்குகள் அதிகம் பெற்று காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெற்றிருக்கிறார்.

பாராளுமன்றத் தொகுதிகளில்......

சென்னை, மார்ச் 12—

திருச்சி பாராளுமன்றத் தொகுதியில் கழக அபேட்சகராகப் போட்டியிட்ட தோழர் எம். எஸ். மணி அவர்களைவிட சுமார் 50,000 வாக்குகள் அதிகம் பெற்று காங்கிரஸ் அபேட்சகர் அப்துல் சலாம் வெற்றி பெற்றிருக்கிறார். காங்கிரஸ் அபேட்சகரைவிட சுமார் 41,000 வாக்குகள் குறைவாகப் பெற்று கம்யூனிஸ்டு அபேட்சகர் தோழர் அனந்தன் நம்பியார் தோல்வியுற்றிருக்கிறார்.

செங்கற்பட்டு:

செங்கற்பட்டு பாராளுமன்ற இரட்டைத் தொகுதியில் நடைபெற்ற தேர்தலின் வாக்குகள் எண்ணிக்கையின் இரண்டாவது கட்டம் நேற்று முடிவடைந்து இன்று 3-வது கட்டமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நேற்று வாக்குகள்எண்ணிக்கையின்போது மத்திய அமைச்சர்களான ஓ.வி. அளகேசனும், திருமதி மரகதம்-சந்திரசேகரன் ஆகியோரும், நமது கழகத்தின் ஆதரவு பெற்ற அபேட்சகர்களான டாக்டர் எ. கிருஷ்ணசாமி, தோழர் என். சிவராஜ் ஆகியோரைவிட முறையே 14,736 வாக்குகளும், 13,349 வாக்குகளும் குறைவாகப் பெற்றிருந்தனர்.

பாராளுமன்றப் பொதுத் தொகுதியில் போட்டியிட்ட மற்றொரு சுயேச்சை அபேட்சகருக்கு இதுவரை 16,952 வாக்குகள் மட்டுமே கிடைத்துள்ளன.

இன்று மீண்டும், வாக்குகள் எண்ணிக்கையின் மூன்றாவது கட்டமாக, சைதாப்பேட்டை தொகுதி வாக்குகள் எண்ணுவது நடைபெறும் என்று தெரிகிறது.

இது முடிந்தபின் நாளை ஸ்ரீபெரும்புதூர், பொன்னேரி தொகுதிகளில் பதிவான வாக்குகள் எண்ணுவது தொடர்ந்து நடைபெறும்; முடிவும் அன்றே அறிவிக்கப்படும்.

90 மைல் வேகத்தில் கடும்புயல் வீசியது

கூரைகள் பறந்தன; மரங்கள் சாய்ந்தன!

ஐதராபாத், மார்ச் 11—

இன்று பிற்பகலில் மணிக்கு 90 மைல் வேகத்தில் வீசிய கடும் புயல் ஐதராபாத் நகரைத் தாக்கியதாம்!

இதன் விளைவாகத் தந்திப் போக்குவரத்துக்கள் நிலைநின்றன—கூரைகள் வானத்தில் பறந்தன—மரங்கள் வீழ்ந்தன—டெலிபோன், தந்திக்கம்பிகள் துண்டிக்கப்பட்டன— நூற்றுக்கணக்கான மக்கள் வீடிழந்தனர் என்றெல்லாம் செய்திகள் கூறுகின்றன. வாக்குப் பதிவுகள்கூட ஒரு மணி நேரம் நிறுத்திவைக்கப்பட்டதாம்.

புயல் காரணமாக எங்கும் புழுதிப்படலம் காணப்பட்டதென்றும், 10 அங்குல நீளமுள்ள ஆலங்கட்டி மழை பெய்த பின்னர்தான் புயல் அடங்கியதென்றும் கூறப்பட்டிருக்கிறது.

விமானங்களின் கதி?

பேகம்பேட்டை விமான நிலையத்திலிருந்து பெங்களூருக்கும் சென்னைக்கும் புறப்படுவதற்குத் தயாராக இருந்த விமானங்கள் சேதமடைந்தன—பிரயாணிகள், தங்கள் பயணத்தை நிறுத்திவைக்க நேரிட்டது—விமான நிலையத்திற்கு வந்துகொண்டிருந்த டகோடா விமானங்கள் திருப்பி அனுப்பப்பட்டன என்றும் செய்திகள் குறிப்பிடுகின்றன.

ஒரே ஒரு ஓட்டு!

கர்னூல், மார்ச் 9—

ஆந்திர மாநிலத்தின் பழைய தலைநகரான கர்னூலில் ஓட்டுப் பதிவு நடைபெற்றபோது மகளிருக்காக அமைக்கப்பட்ட வாக்குச் சாவடி ஒன்றில் 887 வாக்காளர்களில் ஒரே ஒரு பெண் வாக்காளர்தான் ஓட்டுப்போட வந்திருந்தாராம்.

ஆண்களுக்கான சாவடியில், 1,256 வாக்காளர்களில் 25 பேரே வாக்குப் பதிவு செய்தனர் என்றும், நகரில் சராசரி 20 சதவிகிதத்தினரே தங்கள் வாக்குகளைப் பயன்படுத்தினரென்றும் தெரியவருகிறது.

வானவெளியில் 3,000 மைல் உயரத்தில்!

பர்மிங்காம், மார்ச் 11—

வானவெளியில் 3,000 மைல் உயரத்தில் பறக்கக்கூடிய 'ஜுபிடர்' என்ற விமானமொன்றை அமெரிக்க விமானப்படை வெகு துரிதமாகத் தயாரித்து வருவதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

தூத்துக்குடி கி. மு. கொலை வழக்கில் தீர்ப்பு

நிரபராதிகள் என அனைவரும் விடுதலை

திருநெல்வேலி, மார்ச் 11—

கடந்த ஆண்டு செப்டம்பர் திங்கள் 20-ம் நாள் இரவு தூத்துக்குடி சே. வி. சே. சாமி கொலையுண்டதற்குப் பழிவாங்கும் வகையில் அவருடைய அனுதாபிகள் என்றும், தி. மு. கழக ஆதரவாளர்கள் என்றும்கூறப்பட்ட 12 பேர் கூடி சதித் திட்டம் வகுத்து கம்யூனிஸ்டு எனக் கூறப்படும் கிராம முன்சிப் ஆறுமுகம் பிள்ளையைக் கொலை செய்ததாக சென்னை துப்பறியும் இலாகாவினர் தொடர்ந்த வழக்கின் விசாரணை முடிவு பெற்றது.

திருநெல்வேலி செஷன்ஸ் நீதிபதி எ. நாகசாமி அய்யர் வழக்கை விசாரித்து தீர்ப்பு வழங்கியுள்ளார்.

குற்றம் சாட்டப்பட்ட சித்திரைவேலு, மற்ற 11 பேர் மீதும் சுமத்தப்பட்டுள்ள கொலைக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை என்றும், குற்றம்சாட்டப்பட்டவர்கள் நிரபராதிகள் என்றும் கூறி அவர்கள் அனைவரையும் விடுவித்து தீர்ப்பு வழங்கியுள்ளார்.

சென்னை பல்கலைக் கழகப் பட்டப் படிப்பில் மாற்றம்

சென்னை, மார்ச் 11—

சென்னை பல்கலைக் கழகப் பட்டப் படிப்பில், இந்த ஆண்டில் மாற்றம் ஒன்றைச் செய்திருக்கின்றனர்; அதாவது பட்டப்படிப்பு மூன்று வருடமாக மாற்றப்பட்டிருக்கிறது; ஆனால், இந்த மூன்றாண்டுப் பட்டப்படிப்பு 'பி. காம்' (வியாபாரம் பற்றியது) என்ற பட்டப் படிப்புக்குக் கிடையாது. இந்த மாற்றங்கள் சென்னை பல்கலைக் கழகத்தைப் பொறுத்த மட்டிலுமேதானாம்.

செயற்கை 'பெனிசிலின்'

கேம்பிரிட்ஜ், மார்ச் 10—

செயற்கை பெனிசிலின் மருந்தைத் தயார் செய்வதில் கேம்பிரிட்ஜிலுள்ள ஒரு தொழில் நுணுக்க நிறுவனத்தைச் சேர்ந்த இரண்டு பேராசிரியர்கள் மேற்கொண்ட ஆராய்ச்சியில் வெற்றி பெற்றுள்ளனர் என்று தெரிகிறது.

தமிழகத்தில் இறுதிக்கட்டத் தேர்தல்

பல இடங்களில் வாக்குப்பதிவு மும்முரம்

சென்னை, மார்ச் 12—

6 பாராளுமன்றத் தொகுதிகளிலும் 30 சட்டசபைத் தொகுதிகளிலும், தேர்தலின் இறுதிக்கட்டமான நேற்று, தேர்தல் நடைபெற்ற இடங்களில் சுமார் 30 சதவிகித வாக்காளர்களே தங்கள் வாக்குகளைப் பதிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது. இந்தத் தொகுதிகளிலுள்ள மொத்த வாக்காளர் தொகை 34 இலட்சமாகும்.

பொதுவாக மதுரைத் தொகுதியில் வாக்குப் பதிவு மிக மந்தமாகவே நடைபெற்றதாகத் தெரியவருகிறது. மதுரை நகரின் பல தொகுதிகளிலும் பெரும்பாலும் தொழிலாளர்கள்தான் வாக்குப் பதிவில் தீவிர ஆர்வம் காட்டியிருப்பதாகவும், மத்திய வகுப்பினரோ மற்றையவர்களோ அதிக ஆர்வம் காட்டியிருப்பதாகத் தெரியவில்லை என்றும், சுமார் 25 சதவிகிதம் பேர்தான் மொத்தத்தில் இங்கு தங்கள் வாக்குகளைப் பதிவு செய்தனர் என்றும் தெரிகிறது.

திருப்பரங்குன்றம் தொகுதியில் மட்டும் வாக்குப் பதிவு மிக மும்முரமாக நடைபெற்றதாம். திருமங்கலம் தொகுதியிலும் சுமார் 55 சதவிகித வாக்காளர்கள் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

கோவைத் தொகுதியிலும் வாக்குப் பதிவு மும்முரமாக நடைபெற்றுள்ளதாகத் தெரிகிறது. கோவை ஆலைகளிலெல்லாம் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு, வாக்குப் பதிவிற்கென விடுமுறை வழங்கப்பட்டிருக்கிறது.

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கரூர் பாராளுமன்றத் தொகுதிக்கும், அதில் உள்ளடங்கிய சட்டசபைத்தொகுதிகளுக்குமான தேர்தலில் வாக்காளர்கள் தீவிரப் பங்கேற்றுக்கொண்டிருக்கின்றனர். குளித்தலை சட்டசபைத் தொகுதியில் வாக்குப் பதிவு உச்சக் கட்டத்தை அடைந்திருக்கிறது.

மணப்பாறை தொகுதியில் வாக்குப் பதிவு சுமாராகவே நடைபெற்றிருக்கிறதாம்.

திருவாரூர் தொகுதியில் வாக்குப் பதிவு மும்முரமாகவே நடைபெற்றுலுங்கூட, பெரும்பாலான வாக்காளர்கள், தாங்கள் எந்தப் பதிவு நிலையத்திற்குச் சென்று தங்கள் வாக்குகளைப் பதிவு செய்வது என்று தெரியாமல் திண்டாடினதாகவும், இதனால் வாக்குப் பதிவில் பெருமளவு தாமதம் ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது.

வேலூர், ஆம்பூர், குடியேற்றம் போன்ற தொகுதிகளிலும் சுமுகமான முறையில் வாக்குப் பதிவு நடைபெற்றிருக்கிறது.

குற்றாலம் தொகுதியில்தான் மிகக் குறைவான அளவு வாக்காளர்கள் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்திருப்பதாகவும், மொத்தம் 15 சதவிகிதம்பேர்தான் வாக்குப்பதிவு செய்திருப்பர் என்றும் நம்பப்படுகிறதாம்.

நாகப்பட்டினம் சட்டசபைத் தொகுதியைச் சேர்ந்த திருக்குவளை எனும் சிற்றூரில், ஒரு தீவிபத்து ஏற்பட்டதின் காரணமாக இரண்டு வாக்குச் சாவடிகளில் வாக்குப்பதிவு தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டதாம்.

ஒரு 'பெட்ரோமாக்ஸ் லைட்' சரியான முறையில் இல்லாததால் இந்தத் தீவிபத்து ஏற்பட்டதாகவும், வாக்குப் பதிவுக்கான சில சாமான்கள் சேதம் அடைந்தன என்றும், மற்றபடி வேறெந்த விபத்துக்களும் நடைபெறவில்லை என்றும் தெரிகிறது. இத்தீவிபத்து ஏற்பட்டதின் விளைவாக வாக்குப்பதிவு ஒத்திவைக்கப்பட்ட செய்தி தேர்தல் குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டதாம். இந்த இரு வாக்குச் சாவடிகளிலும் வாக்குப்பதிவு செய்வதற்கான நாள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிகிறது.

துங்கபத்திரா கால்வாய்த் திட்டம்

'மேலும் 2,20,00,000 தேவை'

திட்டக் குழுவிடம் கேட்கிறது ஆந்திர மாநிலம்

ஐதராபாத், மார்ச் 12—

துங்கபத்திரா திட்டத்திற்காக ஆந்திர மாநிலம் ரூ. 2,30,00,000 கோடி செலவிட திட்டமிட்டிருந்தது; இப்போது 1957—58-ம் ஆண்டில் இந்தத் திட்டத்திற்காக ரூ. $4\frac{1}{2}$ கோடி ஒதுக்கியிருக்கிறது.

அதிகப்படியாக ஒதுக்கப்பட்டுள்ள 2,20,00,000 ரூபாயை மத்திய அரசாங்கம் தரவேண்டும் என்று கேட்டு திட்டக் குழுவிற்கு ஆந்திர அரசாங்கம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

கால்வாய் தண்ணீர் தகராறு தீராது?

இந்தியா—பாகிஸ்தானிடை உலக பாங்கியின் நிலைமை

புதுடில்லி, மார்ச் 10—

இந்தியாவிற்கும் — பாகிஸ்தானுக்குமிடையே இருந்துவரும் கால்வாய் தண்ணீர் தகராறு குறித்து இதுவரை இந்தியாவிற்கு உலக பாங்கியிடமிருந்து புதிய திட்டங்கள் எதுவும் வரவில்லையென்று தெரிகிறது. ஆனால், உலக பாங்கியிடமிருந்து இத்தகராறுக்கு பரிகாரம்காணும் விஷயத்தில் பாகிஸ்தானுக்கு சில புதிய திட்டங்கள் கிடைத்திருக்கலாம் என யூகிக்கப்படுவதாகச் சில செய்திகள் அறிவிக்கின்றன.

எனினும், அப்படி எதாவது புதிய திட்டங்கள் கிடைத்திருக்குமானால், உலக பாங்கி அதனை இரு நாடுகளுக்கும் அனுப்பி, அவைகளின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கும் என்றே நம்பப்படுகிறதாம்.

கால்வாய் தண்ணீர் தகராறுக்கு இந்த மாத இறுதிக்குள் முடிவு கண்டாக வேண்டுமென்றும் அது இந்த மாதத்திற்கு மேலும் நீடிக்காதவாறு எப்படியும் ஒரு சமரச ஒப்பந்தம் ஏற்பட்டாக வேண்டும் என்றும் இந்தியா கூறியுள்ள கருத்துக்களை உலக பாங்கி ஒப்புக்கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

அணுகுண்டு சோதனைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

டோக்கியோ, மார்ச் 8—

இங்குள்ள பிரிட்டிஷ் தூதுவராலயம் முன்பாக, பசிபிக்கில் பிரிட்டன் நடத்தவிருக்கும் அணுகுண்டுசோதனைகளைக் கண்டித்து 40 கல்லூரி மாணவர்கள், 'சோதனைகளை ஒத்திப்போடு', 'பிரிட்டன், அமெரிக்கா அணு குண்டு சோதனையைநிறுத்தஒருஅமைப்பு அமைக்கவும்' என்ற அட்டைகளுடன் சென்று ஆர்ப்பாட்டம் செய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.